

விளாத்திகுளம் சாலையம் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி. மார்க்கண்டேயன் திறந்து வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானுவேல், செல்வராஜ், மும்மூர்த்தி, விளாத்திகுளம் பேரூர் கழகச் செயலாளர் வேலுச்சாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மதுரை மீனாட்சி அம்மன் குடமுழுக்கு அழைப்பிதழில் 10 பிழைகள்!

# அழைப்பிதழை திருத்தி சட்ட விதிகளுக்கு உட்பட்டு குட முழுக்கு நடத்துக!

## முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!



சென்னை, ஆக. 26-

வரலாற்று சிறப்புமிக்க மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவில் திருக்குட முழுக்கு அழைப்பிதழில் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட அறங்காவலர் குழு பெயர் இடம் பெறாதது குறித்தும், அந்த அழைப்பிதழில் பல பெயர்கள் தவறாக அச்சடிக்கப்பட்டதற்கும் சட்டமன்றத்தில் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து அவையில் பேசி முடித்து செய்தியாளர்களை சந்தித்து பி.கே.சேகர்பாபு அளித்த பேட்டி வருமாறு:

வரலாற்று பெருமை மிக்க மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில் குடமுழுக்கு அழைப்பிதழில் திருமுகப்பாசுர என்பதற்கு உண்மையான சொற்றொடர் திருமுகப் பாசுரம், அவ்வமையம் என்பதற்கு உண்மையான சொற்றொடர் அவ்வமயம் என்பதுதான் சரியான சொற்றொடர் அதே போல் நீன்றசீர் நெடுமாறன் என்று இருக்கிறது.

ஆனால் சரியான சொற்றொடர் நின்ற சீர் நெடுமாறன் என்பது.

இதுபோல் பத்து பிழைகள் இருக்கின்றது அது மாத்திரம் இல்லாமல் இந்து சமய அறநிலைத்துறை கொடைகள் சட்டம் என்ன சொல்கிறது என்றால் சட்டப்பிரிவு 28 ன் படி உட்பிரிவு 6(22)ன் படி அனுமதி அளிக்கிறது.

**பாரம்பரிய குடும்பத்தின் பெயர் கூட அழைப்பிதழில் இல்லை!**

கொடைகளுடைய 1959 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்து சமய அறநிலைத்துறை கொடையின் சட்ட விதிகளிலே குறிப்பிட்டதையும் இந்த பத்திரிக்கையில் இடம் பெற்றிருக்கின்ற வாசகங்கள் மீறி இருக்கின்றது. அறங்காவலர் குழு தலைவராக இருப்பவர் தற்போது ருக்மணி பழனி வேல் அவர்கள்.

பாரம்பரியமிக்க அந்த குடும்பம் தான் 1974 ஆம் ஆண்டு அந்த திருக்கோயிலினுடைய திருக்குட முழுக்கு நடத்தியிருக்கின்றார்கள். ஏன் இன்னும் அதிகம் சொல்லப்போனால் தென் மாநிலங்கள் முழுவதும் இப்பொழுது பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்ற சரணம் ஐயப்பா சுவாமி யினுடைய விக்கிரகத்தையே அன்றைக்கு வடிவமைத்து தந்தவர்கள் தான் அந்த குடும்பம் அவர்களுடைய பெயர் கூட இந்த திருக்குட முழுக்கு அழைப்பிதழிலே இடம் பெறவில்லை.

**இறந்தவர் பெயரை அழைப்பிதழில் போடலாமா?**

இதையெல்லாம் காலையிலேயே சுட்டிக்காட்டி பேரவை தலைவருடைய கவனத்திற்கு கொண்டு வந்தேன்.அதற்கு உரிய பதில் முறையாக கிடைக்கப்பெறவில்லை. இதன் பிறகாவது இந்த அழைப்பிதழை முறைப்படுத்தி 10 இடத்தில் பிழையாக இருக்கின்ற சொற்றொடரை மாற்ற வேண்டும். அதோடு மட்டுமில்லாமல் இறந்து போன தம்பிரான் அவர்களுடைய பெயரும் இந்த அழைப்பிதழிலே இடம்பெற்றிருக்கிறது. இறந்தவருக்கும் இந்த அழைப்பிதழில் உயிர் கொடுத்திருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல மதுரை திருஞானசம்பந்தர் உடைய மடம்தான் இந்த திருக்கோயிலுனுடைய அனைத்து பணிகளையும் முழுமையாக மேற்கொண்ட மடம். அவருடைய பெயர் கூட இதில் முன்னிலைப்படுத்தப்பப்படவில்லை இதையெல்லாம் காலையிலேயே எடுத்துச் சொல்லி இருக்கின்றோம், பேரவை தலைவருக்கும் அவையினுடைய கவனத்தையும் ஈர்த்திருக்கின்றோம் .இது குறித்து இதன் பிறகாவது வேறு பத்திரிகை அடித்து முறையாக குடமுழுக்கு நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்னாள் இந்து சமய அறநிலையத்துறை தலைவர் என்ற வகையில் நான் கோரிக்கை வைக்கின்றேன்.

**ஆட்சியாளர்களின் தூக்கத்தைக் கெடுக்கும் ஐ.டி.விங்!**

மற்றும் ஒரு கேள்வி மானிய கோரிக்கை அறிவிப்பிலேயே இந்து சமய அறநிலையத்துறை அறிவிப்பில் அம்மை பார்த்தவர் தங்கும் மண்டபம் என்று ஒரு அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.அது அவர்களுடைய முகநூல் பதிவு அரசினுடைய முகநூல் பதிவிலேயே அம்மை வார்த்தவர்கள் தங்குமிடம் அரங்கநாதன் திருக்கோயில் உப கோயிலான அன்பில் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் அம்மை வார்த்தைவர்கள் தங்குமிடம் என்றுள்ளது. அம்மை வார்த்தவர்கள் குணமடைந்து வந்து தங்கி நேர்த்திக்கடன் செலுத்தும் மண்டபம் தான் என்று அறிவித்திருந்தோம்.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஐடி விங்கை சார்ந்தவர்கள் இரவு 12 மணி முதல் 2 மணி வரை இதை திரித்து கூறியுள்ளார்கள் என்றார். திராவிட முன்னேற்ற கழகம் அவருடைய தூக்கத்தை தொலைக்கிறது என்பதை அந்த செய்தியினுடைய தாக்கத்திலிருந்து தெரிகிறது. ஆனால் உண்மை என்னவென்றால் அவர் அறிவித்த அறிவிப்பின் நகல் தான் இது. இப்படி உண்மைக்கு புறம்பாக உண்மைக்கு ஒவ்வாத வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்ற கூற்றை தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகின்ற அவருடைய செயல்பாட்டை கண்டிக்கின்றோம் தவறுகள் என்பது ஒரு சில நேரத்திலே தவறி செய்யக்கூடியதுதான் அதில் உண்மை இருக்கிறது என்ற பட்சத்தில் அதை ஒப்புக்கொண்டு திருத்திக் கொள்ள வேண்டும் அதுதான் மனித இயல்பு தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் தான் என்று வாதிடுவது சரியில்ல.

**அறங்காவலர் குழுத் தலைவர் பெயர் இடம் பெற வேண்டும்!**

ஆகவே இந்த குடமுழுக்கு அழைப்பிதழை திருத்தி முறையாக அழைப்பிதழில் அறங்காவலர் குழு தலைவர் உட்பட அனைவருடைய பெயரும் இடம் பெற வேண்டும். எழுத்து சொற்றொடரில் இருக்கின்ற பிழைகள் அகற்றப்பட வேண்டும். மதுரை ஆதினத்தின் பெயர் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும், சட்ட விதிகளுக்கு உட்பட்டு இந்த குடமுழுக்கு நடத்த வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. அறங்காவலர் குழு நியமனத்தை பற்றி கேட்கிறீர்கள்

சில ஊடகங்களில் வருகின்ற பதிவுகளை எல்லாம் பார்த்தால் அரசியலுக்கு யாருமே வரக்கூடாது என்றளவில் தான் ஒரு மாபியா கும்பல் அதற்கு வேலை செய்து கொண்டிருக்கிறது அதற்குத்தான் நாங்கள் ஒரு பெயரை வைத்து இருக்கின்றோம் ரூட் மாபியா என்று அரசியலுக்கு வருகின்ற பெண்களை முதற்கொண்டு குடும்ப பெண்கள் முதற்கொண்டு இழிவாக தவறாக பேசுவது தான் வழக்கமாக கொண்டிருப்பவர்கள். அந்த அடிப்படையில் தான் உண்மைக்கு மாறான கருத்துக்களை பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்தது போல இன்றைக்கு அவர்களுடைய முகநூல் இன்ஸ்டாகிராம் பதிவுகள் தொடர்கின்றது. நீங்கள் சொல்வது போல் அப்படி எந்த தகவலும் இல்லை.யாரும் கடந்த காலங்களில் நாங்கள் நியமித்த அறங்காவலர்களுடைய பட்டியலை படித்தாலே உங்களுக்கு தெரியும்.

**தகுதியானவர்களை நாங்கள் நியமித்தோம்!**

மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலை எடுத்துக் கொண்டால் அப்போலோ மருத்துவமனையுடைய ஓனர் தான் அதனுடைய அறங்காவலர் குழுத் தலைவர், வடபழனி முருகன் கோவிலை எடுத்துக் கொண்டால் நம்முடைய தினமலருடைய மேன்மை தாங்கிய ஆதிமூலம் தான் அதற்கு தக்கார். அதேபோல் கள்ளழகர் கோவில் அறங்காவலர் குழுவை எடுத்துக் கொண்டால் அதற்கு வெங்கடேஸ்வரா கல்லூரி உரிமையாளர் வெங்கடாஜலம் தான் அதற்கு தலைவர் நம்முடைய மதுரை மீனாட்சியம்மன் திருக்கோவிலை எடுத்துக் கொண்டால் பாராம்பரிய வம்சத்தை சார்ந்த நீதிமன்ற உத்தரவு படி நீதிமன்ற தீர்ப்பு பெறப்பட்டு தலைவராக ஆனவர் தான் ருக்மணி பழனிவேல் இப்படி அனைத்து இடங்களிலும் தகுதியான உறுப்பினர் தான் நியமத்திரு க்கின்றோம் ஏற்கனவே நம்முடைய உயர் நீதிமன்ற நீதி அரசராக இருந்த திரு. மகாதேவன் தலைமையிலே கொண்ட குழு அளித்த வழிகாட்டுதல் படி தான் அனைத்து கோவில்களுடைய அறங்காவலர்களும் நியமிக்கப்பட்டார்கள்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. குறிப்பிட்டார்.



உடற்கல்வி இயக்குனர் பால்சாமி அவர்களின் நினைவாக விளாத்திகுளம் பாரதியார் பேருந்து நிலையம் முன்பு முதலாம் ஆண்டு மினி மாரத்தான் போட்டியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் துவக்கி வைத்தார். விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, இம்மானுவேல், பேரூர் கழகச் செயலாளர் வேலுச்சாமி, பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு, வடக்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ரஞ்சித், வார்டு செயலாளர் ஸ்டாலின், கென்னடி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் தரணி சர்க்கரை ஆலை ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். தென்காசி மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் எம்.பி. அங்கு சென்று தொழிலாளர் களிடம் பேச்சு வார்த்தை நடத்தினார். உடன் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் பொன். முத்தையா பாண்டியன் உள்ளார்.

### தொழிலாளர்கள் தொடர் போராட்டம்!

# வாசுதேவ நல்லூர் சர்க்கரை ஆலையை இயக்க வலியுறுத்தப்படும்!

## தென்காசி மரு.ராணி ஸ்ரீ குமார் எம்.பி. தகவல்!



தென்காசி,ஆக.26-

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூரில் செயல்பட்டுவரும் தரணி சர்க்கரை ஆலை முன்பு ஊதியம் நிலுவைத் தொகை மற்றும் ஊழியர் வருங்கால வைப்பு நிதி நிலுவைத் தொகையை வழங்கிட வேண்டி, தொழிலாளர்கள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் அங்கு சென்று தொழிலாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி னார்.

மேலும் தொழிலாளர்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்த தென்காசி மரு.ராணி ஸ்ரீகுமார் எம்.பி. சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம், ஊதியம் நிலுவைத் தொகை மற்றும் வருங்கால ஊழியர் வைப்பு நிதி நிலுவைத் தொகை வழங்கிடவும் தொடர்ந்து சர்க்கரை ஆலை இயக்கவும் வலியுறுத்தப்படும் எனக் கூறினார்.

இந்நிகழ்வில் வாசுதேவ நல்லூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் பொன். முத்தையாபாண்டியன் மற்றும் தொழிலாளர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மீனாட்சி அம்மன் கோயில் கும்பாபிஷேக விழா ஏற்பாட்டில்!

# அமைச்சர் நிர்மல்குமார் சட்டத்தை மீறுகிறார்!

## தி.மு.க. கவுன்சிலர் குழுத் தலைவர் குற்றச்சாட்டு!

மதுரை, ஆக. 26-

மீனாட்சி அம்மன் கோயில் கும்பாபிஷேக விழா ஏற்பாடுகளில் அமைச்சர் நிர்மல்குமார் சட்டத்தை மீறி செயல்படுகிறார், என்று தி.மு.க. கவுன்சிலர்கள் குழுத் தலைவர் ஜெயராம் குற்றம் சாட்டினார்.

மதுரை மாநகராட்சிக் கூட்டத்தில் அவர் பேசிய தாவது:

மீனாட்சி அம்மன் கோயில் கும்பாபிஷேக விழா ஆலோசனைக் கூட்டத்துக்கு அறங்காவலர்களை அழைப்பதில்லை. கும்பாபிஷேக விழா அழைப்பிதழ்களில் பெயர்கள் அச்சிடவில்லை. மீனாட்சி அம்மன் கும்பாபிஷேக விழா ஆலோசனைக் கூட்டங்களில் அமைச்சர்களின் தலையீடுகள் அதிகரித்துள்ளன.

அறங்காவலர்கள் புறக்கணிப்பு பற்றி நாளிதழ்களில் செய்திகள் வந்துள்ளன. மீனாட்சி அம்மன் கோயிலுக்கு முன்னாள் அமைச்சர் பழனிவேல் தியாகராஜனின் தந்தை பழனிவேல்ராஜன், தாத்தா பிடி.ராஜன் போன்ற அவர்களது குடும்பத்தினர் காலம், காலமாக சேவை செய்து வருகிறார்கள். தற்போது

அறங்காவலர் குழுத் தலைவராக பழனிவேல் தியாகராஜனின் தாயார் ருக்மணி உள்ளார். அவரையும், அறங்காவலர் உறுப்பினர்களையும் கோயில் நிர்வாகம் மதிப்பதில்லை. மின்துறை அமைச்சர் நிர்மல்குமார் சட்டத்தை மீறி மீனாட்சி அம்மன் கோயில் விஷயங்களில் தலையிடுகிறார்.

அமைச்சர் நிர்மல்குமார், அவரது கட்சி எம்.எல்.ஏ.க்கள் இடையே ஒற்றுமையில்லை. அவருக்கும்,த.வெ.க. எம்.எல்.ஏ.க்களுக்கும், மதுரைக்கு தேவையான நிதி, திட்டங்களைப் பெற்றுத்தரும் திறன் இல்லை.

மீனாட்சியம்மன் கோயில் விழாக்கள் அனைத்திலும் மாநகராட்சியின் பணி முக்கியத்துவம் வாய்ந்தது. விழா சிறப்பாக நடைபெற உதவும் மாநகராட்சி கவுன்சிலர்களை மீனாட்சி அம்மன் கோயில் விழாக்களில் அறநிலையத் துறை அதிகாரிகள் மதிப்பதே இல்லை. திருக்கல்யாணத்துக்கு ஒருபாஸ் வழங்கிவிட்டு, கணவனையோ, மனைவியையோ அழைத்து வரக்கூடாது என்றார்கள்.

மீனாட்சி அம்மன் கோயில் கும்பாபிஷேக விழாவில் கவுன்சிலர்களுக்கு உரிய மதிப்பும், மரியாதையும் மாநகராட்சி பெற்றுத் தர வேண்டும் என்றார்.

### கடையநல்லூரில் மர்ம காய்ச்சல் பரவல்!

# சென்னையிலிருந்து சிறப்பு நிபுணர் குழு அனுப்புக!

## அமைச்சரிடம் தி.மு. இராசேந்திரன் எம்.எல்.ஏ. கோரிக்கை!

தென்காசி.ஆக.26-

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் மர்ம காய்ச்சல். சென்னையில் இருந்து சிறப்பு நிபுணர் குழுவை அனுப்புக என மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.மு.இராசேந்திரன் கோரிக்கை மனு அளித்துள்ளார்.

24.08.2026 அன்று சட்டப்பேரவை நிறைவு பெற்றவுடன் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரை சந்தித்து கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.மு.இராசேந்திரன் விடுத்துள்ள கோரிக்கையில்கூறியிருப்பதாவது:-

கடையநல்லூர் பகுதியில் மர்மக் காய்ச்சல் பரவலாக தென்படுகிறது,

14 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.


இப்பகுதியில் இது போன்ற மர்மக் காய்ச்சல் வருவதற்கான அறிகுறிகளை காரண காரியங்களை ஆராய்வதற்கு சென்னையிலிருந்து சிறப்பு நிபுணர் குழு ஒன்று அனுப்பி வைத்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என கூறியுள்ளார்.

இது குறித்து ஆய்வுக் கூட்டம் சென்னையில் நடைபெற இருப்பதாகவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

### முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை! வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர்

# அயப்பாக்கம் துரை வீரமணி இல்ல மணவிழா வரவேற்பு! கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துகிறார்!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் – கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. பங்கேற்பு!



சென்னை, ஆக. 26 -

சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் துரை வீரமணி - வீர.கனிமொழி ஆகியோரின் புதல்வி வீர.குடியரசிக்கும், சென்னை, ஜி.ராஜசேகர் - ஆர்.பூங்கோதை ஆகியோரின் புதல்வர் ரா.கார்த்திகேயனுக்கும் திருமண வரவேற்பு விழா இன்று (26.08.2026 - புதன்கிழமை) மாலை 6.30 மணிக்கு, சென்னை, வானகரம், ஸ்ரீவாரு வெங்கடாஜலபதி பேலஸில் நடைபெறுகிறது.

மணவிழா வரவேற்பு விழாவில் ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் துரை வீரமணி வரவேற்புரை ஆற்றுகிறார்.

சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை வகிக்கிறார்.

திருவள்ளூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், மதுரவாயல் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி, முன்னாள் அமைச்சர் பா.பெஞ்சமின், மதுரவாயல் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி, மாவட்டப் பொருளாளர் வேளச்சேரி எஸ். பாஸ்கரன் எம்.சி, எஸ்.அருணாச்சலம், சைதை மா.அன்பரசன், ராமாபுரம் வ.செல்வகுமார் எம்.சி, ஜெ. ஞானப்பிரகாசம், என்.இ. கே.மூர்த்தி, ஏ.ஜெ.பவுல், அடையாளம்பட்டு ஏ.ராஜா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இத்திருமண வரவேற்பு விழாவில் கழகத் தலைவர், முன்னாள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், சட்டமன்றத் எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மணவிழா வரவேற்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழகப் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி, முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் முனைவர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், முன்னாள் அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பி.கே.சேகர்பாபு, தா.மோ. அன்பரசன், முனைவர் கோ.வி.செழியன் மற்றும் முனைவர் தமிழச்சி தங்கப் பாண்டியன் எம்.பி, இரா. கரிராஜன் எம்.பி, அன்பகம் கலை, ஐ.பரந்தாமன், ப. தாயகம் கவி, பூச்சி எஸ். முருகன், எஸ்.ஆர்.ராஜா, நே.சிற்றரசு, ஆர்.டி.சேகர், ஆ.கிருஷ்ணசாமி, இ.கருணாநிதி, ஆர்.பத்மநாபன், மேயர் பிரியா ராஜன், மேயர் ஜி.உதயகுமார், துணை மேயர் மு.மகேஷ்குமார், பிரபு கஜேந்திரன், எஸ்.ஜோயல், வி.பி.ஆர். இளம்பரிதி, பொன்.தனபால், திருத்தணி எஸ்.சந்திரன், வல்லூர் எம்.எஸ். கே.ரமேஷ்ராஜ், டி.ஜெ. எஸ்.கோவிந்தராஜ், வி.ஜி. ராஜேந்திரன், ப.ரங்கநாதன், எஸ்.அரவிந்த்ரமேஷ், ஜோசப் சாமுவேல், கே.பி.பி.சங்கர், ஏ.எம். வி.பிரபாகர்ராஜா, காசி முத்து மாணிக்கம், பி.டி. பாண்டிசெல்வம், க.தனசேகரன் எம்.சி, பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி மு.மணி மாறன் எம்.சி, ரத்னா லோகேஸ்வரன் எம்.சி, எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், பா.வாசுகி பாண்டியன், என்.தனசேகரன், தமிழன் பிரசன்னா, துணை மேயர் கோ.காமராஜ், படப்பை ஆ.மனோகரன், எஸ்.பத்மப்ரியா, சி. ஜெரால்டு, நடுக்குத்தகை கே.ஜெ.ரமேஷ், பி.கே. மூர்த்தி எம்.சி, பி.ஜெ. மூர்த்தி மற்றும் பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.